பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 04 ஞாயிற்றுக்கிழமை 20.07.2025 கதிர் 253

## இனி இது ரகசியம் அல்ல!

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள 22 குளங்களைக் காணவில்லையாம் என்று இப்போது கண்டுபிடித்திருக்கிறார். அதாவது இந்தக் குளங்கள் ☞ 2

## தென்னக்கோனுக்கு எதிரான விசாரணை அறிக்கை அடுத்த வாரம் சபாநாயகரிடம்

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதவிக்கான அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தினார் என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர் சூரசேன தலைமையிலான சிறப்புக்குழு எதிர்வரும் வாரம் சபாநாயகருக்கு தமது விதப்புரைகள் உள்ளடங்கிய அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து அவரைப் பதவி நீக்குவதற்கான யோசனையை ஆளும் தரப்பு சபாநாயகரிடம் முன்வைத்தது. இந்த யோசனையில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது 23 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கை முறை) சட்டத்தின் 05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 3 (ஈ) மற்றும் 3(உ) பிரிவுகளுக்கு அமைய துர்நடத்தை மற்றும் பதவியின் அதிகாரம் மற்றும் தத்துவங்களை பாரதூரமான முறையில் துஸ்பிரயோகம் செய்தமை தொடர்பில் தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவது குறித்து ஆராய்வதற்கான சிறப்புக்குழுவை அமைக்கும் யோசனை கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும் இந்த யோசனைக்கு ஆதரவாக ☞ 2

## பாடசாலை மாணவிகள் கர்ப்பமடையும் வீதம் இலங்கையில் அண்மைக் காலமாக அதிகரிப்பு

### அமைச்சர் சரோஜா தெரிவிப்பு

நாட்டில் பாடசாலை மாணவிகள் கர்ப்பமடையும் வீதம் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. இளம்பெண்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் கல்வி மற்றும் விழிப்புணர்வு ☞ 2

## வகுப்பறை மாணவர் எண்ணிக்கையை 25 – 30 ஆக மட்டுப்படுத்த நடவடிக்கை

### பிரதமர் ஹரினி தெரிவிப்பு

ஒரு பாடசாலை வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கையை 25-30 ஆகக் குறைப்பது ஒரு இலக்காகும். ஒரு வகுப்பறையில் 50-60 மாணவர்களுடன் தரமான கல்வியை வழங்க முடியாது என்றும் கல்வி,,உயர்கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சர், பிரதமர் ☞ 2

## உரிய நேரத்தில் உரம் கிட்டவில்லை உற்பத்திகளுக்கு விலையும் இல்லை

### விவசாயிகளைப் பாதுகாப்போம் என்றவர்களின் ஆட்சியில் இதுதான் நிலை என்கிறார் சஜித்

விவசாயிகளுக்கு உரிய நேரத்திற்கு உரம் கிடைத்தபாடில்லை. அவர்களின் அறுவடைகளுக்கு நியாயமான விலையும் கிடைத்தபாடில்லை. விவசாய உபகரணங்களின் விலைகள் அதிகரித்துள்ள இந்த நேரத்தில் விவசாயிகளைப் பாதுகாப்போம் எனக் கூறிய இந்த ஆளும் தரப்பு பொருளாதார மத்திய நிலையங்களை விற்று தனியார் மயமாக்கல் திட்டத்தை முன்னெடுக்கத் தயாராகி வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அநுராதபுரம் தம்புத்தேகம நகரில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 2

## என்பிபி முன்வைத்திருக்கும் கல்வி மறுசீரமைப்பு சில்லறைத்தனமாது

### முன்னாள் அமைச்சர் விஜயதாச விளாசல்

கட்டாய பாடங்களில் ஒன்றை குறைத்துவிட்டு, நேரத்தை ஐந்து நிமிடத்தால் அதிகரிப்பது எவ்வாறு கல்வி மறுசீரமைப்பாக அமையும்? இதனை சில்லறைத்தனமானதொரு செயற்பாடு என்றே குறிப்பிடவேண்டும். கல்வி மறுசீரமைப்பை சட்ட உருவாக்கத்தின் ஊடாகவே அமுல்படுத்த வேண்டும். அரசாங்கத்துக்கு அவசியம் என்பதொன்று இருக்குமாயின் நாம் சமர்ப்பித்த உத்தேச உயர்கல்வி ஆணைக்குழு சட்டமூலத்தை சட்டமாக்கலாமென முன்னாள் நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

உத்தேச கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உத்தேச கல்வி மறுசீரமைப்பை ஆளும்தரப்பு அமுல்படுத்த முனைகிறது. உண்மையில் இது மறுசீரமைப்பா என்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது. 6 கட்டாய பாடங்களின் எண்ணிக்கையை 5 ஆக குறைத்தல், 45 நிமிட பாடவேளையை 50 நிமிடமாக அதிகரிப்பதை எவ்வாறு கல்வி மறுசீரமைப்பு என்று குறிப்பிடுவது. ☞ 6

## கொழும்பு அரசின் வடக்கு நிகழ்வுகளில் உள்ளூராட்சி தவிசாளர்கள் புறக்கணிப்பு

### என்பிபி ஆளும்தரப்பு மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கொழும்பு அரசின் நிகழ்வுகளில் பிரதேச தவிசாளர்களை தேசிய மக்கள் சக்தியினர் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர் என்று குற்றச்சாட்டு எழுப்பப்படுகின்றது.

கடந்த மாதம் மறுமலர்ச்சிக்கான பாதை திட்டத்தின் கீழ், காங்கேசன்துறை நடேஸ்வர கல்லூரி வீதி புனரமைப்பு பணியின் ஆரம்ப நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. ☞ 6

## துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் மதுவரித் திணைக்கள அதிகாரி கைது

தலவத்துகொட பகுதியில் அமைந்துள்ள களியாட்ட விடுதிக்கு அருகில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிப் சூடு தொடர்பில் கைது செய்யப்பட்ட மதுவரித் திணைக்களத்தின் அதிகாரி உள்ளிட்ட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கடுவல நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவத்துகொட பகுதியில் அமைந்துள்ள களியாட்ட வீதிக்கு அருகில் நேற்று அதிகாலை ஒருமணி அளவில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது. ☞ 6

## இன்னொரு அடக்குமுறை சட்டம் வேண்டாம் யாழ்ப்பாணத்தில் கையெழுத்துப் போராட்டம்



பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாது செய்யக் கோரி நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுவரும் அடையாள கையெழுத்து போராட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. சம உரிமை இயக்கம் என்ற அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் யாழ். மத்திய பேருந்து நிலைய பகுதியில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

இன்னொரு அடக்குமுறை சட்டம் வேண்டாம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச்செய் என்று முழக்கத்துடன் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

## ஜூலைப் படுகொலை நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணத்தில் கலந்தாய்வு

சிறைகளில் வாடுகின்ற அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய பொது அமைப்புகளின் கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் நடைபெற்றது.

சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கான நினைவேந்தலும் அதற்கான நூதனப் போராட்டமும் ஜூலை 24, 25 ஆகிய நாள்களில் முன்னெடுப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இது குறித்த கலந்துரையாடலே நேற்று இடம்பெற்றது.

குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் குறித்த கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. 8 மாவட்டங்களிலும் விடுதலை விருட்சம் நாட்டுவதற்காக விடுதலை நீரைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் கலந்தாலோசிக்கப்பட்டது.

இன விடுதலைக்காகவும் 30 ஆண்டுகளாக சிறையில் வாடுகின்ற கைதிகளின் விடுதலைக்காகவும் குறித்த விடுதலை விருட்சம் நாட்டும் நிகழ்வு முன்னெடுக்கப்பட உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இருந்த இடங்களை அரசியல்வாதிகள் ஆட்டையைப் போட்டுவிட்டார்கள் என்பதை இப்போதுதான் கண்டுபிடித்திருக்கிறார்கள். குளங்கள் இருந்த இடங்கள் பலவற்றிலும் இப்போது நீச்சல் குளங்களுடன் சொகுசு விடுதிகளை அரசியல்வாதிகள் கட்டியிருக்கிறார்களாம். நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்கவும் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

நீர்ப்பாசனத் துறையும் நில அளவைத் துறையும் இணைந்து அந்த 22 குளங்கள் இருந்த இடங்களையும் கண்டுபிடித்து அவற்றின் எல்லைகளை வரையறுக்க முடிவு செய்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் கூறினார்.

அரசியல்வாதிகள் குளங்களை ஆக்கிரமித்தால் மக்கள் மட்டும் சும்மா இருப்பார்களா? எனவே அவர்களும் தங்கள் பங்குக்கு அனுராதபுரம் நுவர வெவயைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆக்கிரமித்திருக்கிறார்களாம்.

இந்த ஆக்கிரமிப்புக்களில் ஏரியின் காப்புப் பகுதியில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லம், ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லம் ஆகியனவும் அடக்கமாம். வரலாற்றில் செய்யப்பட்ட தவறுகளை இப்போது சரிசெய்யப்போவதாகப் பிரதி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

அவரை யாராவது யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து இங்கேயும் பல டசின் கணக்கில் சிறிய குளங்கள், குட்டைகள், கேணிகள் எல்லாவற்றையும் மண் போட்டு நிரப்பி ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்கள் என்று சொல்லி அவற்றையும் மீட்டுத் தரச் சொன்னால் நன்றாக இருக்கும்.

.........................

இந்திய ஹிந்தி நடிகர் ஷாருக்கான் இலங்கையின் மிகப் பெரிய சூதாட்ட விடுதித் திறப்பு விழாவிற்கு வருவதாக இருந்தார். ஆனால் அவர் அந்த நிகழ்வில் கலந்-துகொள்ளமாட்டார் என்று இந்த வாரம் திடீரென அறிவிக்கப்பட்டது. ஷாருக்கானின் வருகை நின்றதற்கு தனிப்பட்ட காரணங்கள உண்டுஎன்றுசூதாட்ட விடுதிநிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

இருந்தாலும் இந்தச் சூதாட்ட விடுதியை அமைப்பதற்கான அனுமதியை மைத்திரிபால சிறீசேன அரசுத் தலைவராக இருந்தபோது தரமுடியாது என்று மறுத்திருந்தார். அது தொடர்பில் ஓர் அமைச்சரவைத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் எப்படி சூதாட்ட விடுதி அமைக்கப்பட்டது? அதற்கு யார் அனுமதி வழங்கியது? போன்ற சர்ச்சை தெற்கில் கிளம்பியிருந்தது.

இந்தச்சர்ச்சைகளைஅடுத்தேஷாருக்கான் வருகை தடைப்பட்டது என்கிற வகையிலான கதைகளும் உலாவின. ஆனால், ஷாருக்கான் படப்பிடிப்பின்போது விபத்தில் சிக்கியுள்ளார். அதனாலேயே அவரது இலங்கை வருகை தடைப்பட்டுள்ளது. 'கிங்'படத்திற்கானசண்டைக் காட்சியைப் படமாக்கிக்கொண்டிருந்தபோது இந்த விபத்து நடந்தது.

இந்தியாவின் மும்பையில் உள்ள கோல்டன் டொபாகோ ஸ்டுடியோவில் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தபோது, ஷாருக்கான் காயமடைந்தார். அவருக்குத் கடுமையான தசைப்பிடிப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மேலும் சிகிச்சைக்காக ஷாருக்கான் அமெரிக்காசென்றுள்ளதாகவும்கூறப்படுகிறது. அடுத்த சில மாதங்களுக்கு அவருக்கு ஓய்வு தேவைப்படுகின்றது என்றும் செப்டம்பர் அல்லது ஒக்டோபரிலேயே அவர் மீண்டும் படப்பிடிக்குத் திரும்புவார் என்றும் கூறப்படுகின்றது. இதன்காரணமாகவேஅவரது இலங்கை வருகை தடைப்பட்டதேயன்றி, சூதாட்ட விடுதிக்கு யார் அனுமதி வழங்கியது என்கிற சர்ச்சையினால் அல்லவெனத் தெரிவிக்கப்படுகின்றது. ..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## உரிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

உரம் மற்றும் எரிபொருளை பெற்றுத் தருவோம் ஆடம்பரம் மிக்க வாழ்க்கையை வாழ்வதற்கான சூழலை விவசாயிகளுக்கு உருவாக்கித்தருவோம். நெல்லுக்குஉத்தரவாத நிலையானவிலைகளைகட்டளைச்சட்டங்கள் மூலம் சட்டப்பூர்வமாக பெற்றுத் தருவோம் என இந்த ஆளும்தரப்பு தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை வழங்கியிருந்தன. யானை - மனித மோதலுக்கு தீர்வு காண்போம் என்றும் வாக்குறுதி வழங்கியிருந்தது. இன்று மனித உயிர்களும்இயானைகளின்உயிர்களும்கூட இழக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு வழங்கிய எந்தவித வாக்குறுதிகளையும் இந்த ஆளும்தரப்பு இதுவரைநிறைவேற்றவில்லை.

.இந்த ஆளும்தரப்பின் கீழ் எத்தனை யானைகள் உயிரிழந்துள்ளன. பயிர் சேதம் உயிர் இழப்பு மற்றும் சொத்து சேதங்கள் என்பனவற்றுக்கு எந்த வேலைத்திட்டமும் இந்த அரசாங்கத்திடம் இல்லை. இன்று விவசாயிகளும் வனவிலங்குகளும் அழிக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் காணப்படும் பிரச்சினைகளை தீர்க்காது நாட்டை எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்ல முடியும்?

இன்றைய நிலவரப்படி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிரேத அறையில் காணப்படும் அதி குளிரூட்டி இயந்திரம் செயலிழந்துள்ளது. இலங்கையின் பிரதான வைத்தியசாலையே இந்தப் பிரச்சினைகளை சந்தித்து வருகிறது. இவற்றையே சரியாகச் செய்ய முடியாத அரசாங்கத்தால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. உப்பைக் கூட சரியாக பெற்றுத் தர முடியாத அரசாங்கமே இன்று ஆட்சியில் இருந்து வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்திற்கு பயந்து இந்த ஆளும்தரப்பு அண்மையில் மின்சாரம் மற்றும்எரிபொருள்விலைகளை அதிகரித்தது. எரிபொருள் விலை சூத்திரம் மின்சார கட்டண சூத்திரம் போன்றவற்றை நீக்குவோம் என வீராப்பு பேசியிருந்தாலும் இன்று அதைச் செய்வது இவர்களுக்கு சாத்தியமற்ற ஒன்றாக காணப்பட்டு வருகிறது. நாட்டில் தற்போது அதிக வரிச்சுமையும் காணப்படுகின்றன என்றார்.

## தென்னக்கோனுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களித்துள்ளனர்.

இதற்கமைய முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்ந்து விதப்புரையை சமர்ப்பிப்பதற்கு, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கை முறை) சட்டத்தின் பிரகாரம் பிரதம நீதியரசரின் பரிந்துரைக்கு அமைய உயர்நீதிமன்ற நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி பி.பி.சூரசேன தலைமையில் மூவரடங்கிய குழுவை நியமித்தார். நீதியரசர் (ஓய்வுநிலை)எம்.பி இத்தவெல, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் இணை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

சிறப்பு குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்;குவதற்கு சட்டமா அதிபரினால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரணி திலீப பீறிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் ரஜித பெரேரா ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

சிறப்புக்குழுவின் முன்னிலையில் பிரதிவாதியான பொலிஸ்மா அதிபர் தேசபந்து சுமார் ஒருமாதகாலமாக முன்னிலையாகி பல்வேறுவிடயங்கள்குறித்துசாட்சியமளித்தார். 2023.12.31 ஆம் திகதி மாத்தறை வெலிகம டபிள்யூ 15 ஹோட்டல் மீது இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் குழு விரிவான விசாரணைகளை மேற்கொண்டது.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய 30 சாட்சியாளர்கள் குழுவில் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர்கள்(தற்போது சேவையில் இருந்து இடைநீக்கம்) முன்னிலையாகி பல விடயங்களை குறிப்பிட்டனர்.

சிறப்புக்குழுவில் முன்னிலையான கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் தாங்கள் மாத்தறை நீதவான் நீதிமன்றத்துக்கு சத்தியபிரமாணம் ஊடா பொய்யுரைத்ததாகவும், சோடிக்கப்பட்ட விடயங்களை குறிப்பிட்டதாகவும், கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு போலியான விடயங்களை வாக்குமூலமாக குறிப்பிட்டதாகவும் குறிப்பிட்டனர்.

2023.12.31 ஆம் திகதி தாங்கள் தான் குறித்த ஹோட்டல் மீது துப்பாக்கி சூட்டை மேற்கொண்டதாகவும், தப்பித்துச் செல்லும் போது மாத்தறை வெலிகம பொலிஸ் நிலையத்தின் நடமாடும் சேவையில் ஈடுபட்ட இராணுவ அதிகாரி துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டதாகவும்,இதனால் தமது சக பொலிஸ் உத்தியோகத்தரான உபுல் என்ற பொலிஸ் பரிசோதகர் உயிரிழந்ததாகவும் ஏற்றுக்கொண்டனர்.

இந்த விடயத்தை தாங்கள் 2024 ஜனவரி மாதமளவில் மாத்தறை நீதிமன்றத்துக்கு குறிப்பிடவில்லை என்றும், மூன்றாம் தரப்பின் துப்பாக்கி சூடு மேற்கொண்டதாகவும் சோடிக்கப்பட்டதொரு விடயத்தை குறிப்பிட்டதாகவும் குறிப்பிட்டனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கு அப்போதைய பதில் பொலிஸ்மா அதிபராக பதவி வகித்த தேசபந்து தென்னகோன பொறுப்புக்கூற வேண்டும் என்று மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிசாந்த டி சொய்சா குழுவில் சாட்சியமளித்தார்.

குழுவில் சாட்சியமளித்த பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஹரக்கட்டாவின் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய 147பேரை கைது செய்வதற்காகவே தொடர்ச்சியான சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ள உத்தரவு வழங்கினேன்.

சட்டரீதியிலான கடமைகளுக்கு சென்று இவர்கள் முறையற்ற வகையில் செயற்பட்டதற்கு நான் பொறுப்புக்கூற முடியாது.தேசியமக்கள்சக்திஆட்சிக்குவந்ததன் பின்னர் என்மீது இந்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்று புதிய கதையை குறிப்பிடும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் உத்தியோகத்தர்கள் அன்று பிறிதொரு கதையை குறிப்பிட்டார்கள். சேவையில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர் தற்போது புதிய கதையை குறிப்பிடுகிறார்கள். இவர்கள் நாளை பிறிதொரு கதையை குறிப்பிடுவார்கள் என்று குறிப்பிட்டார்.

அத்துடன்பிரதிவாதியானதேசபந்துதென்ன கோன் தரப்பில் குழுவில் முன்னிலையான சட்டத்தரணி சஞ்சய வீரவிக்கிரம இந்த குழுவில் தனது சேவைபெறுநரான தேசபந்து தென்னகோனுக்கு நியாயம் கிடைக்காது.அரசியல்நோக்கத்துக்காகவேஇந்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றார்.

குழுவில் முன்னிலையான சாட்சியங்கள் குறிப்பிட்ட விடயங்கள் மற்றும் இதர விசாரணை விடயங்களை ஆராய்ந்து குழு கடந்த மாதம் முதல் வாரமளவில் விசாரணைகளை நிறைவுப்படுத்தியது. இறுதி அறிக்கை எதிர்வரும் வாரம் சபாநாயகருக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிபுரிதலைவழங்குவதற்குகல்விஅமைச்சு மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

மகளிர்; விவகாரம் மற்றும் சிறுவர் பாதுகாப்புஅமைச்சின்காரியாலயத்தில்நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதுமேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாடசாலை மாணவிகள் கர்ப்பமடையும் வீதம் நாட்டில் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.இளம்பெண்கள்மற்றும்18வயதுக்கு குறைந்த பெண்கள் கர்ப்பமடையும் வீதம் அதிகரித்துள்ளது.

பெண்கள்தான்அனைத்துக்கும்பொறுப்புக் கூற வேண்டும் என்ற நிலைப்பாடு சமூகத்தின் மத்தியில் காணப்படுகிறது. இவ்வாறான சம்பவங்கள் ஏதும் நேர்ந்தால் பெண்கள் சமூகத்தில் பல விமர்சனங்களுக்கும் உள்ளாக நேரிடுகிறது. இருப்பினும் இணைப் பொறுப்புதாரி பற்றி எவரும் பேசுவதில்லை.

இலங்கையில் கருக்கலைப்பு சட்டவிரோ தமானது.கர்ப்பமடையாமல் இருப்பதற்கு அறிவியல் ரீதியில் பலவழிமுறைகள் உண்டு. பொறுப்பினைஏற்பதில்உறுதிப்பாடற்றதன்மை காணப்படும் நிலையில் குழந்தைகளைப் பிரசவித்து, அவர்களை அநாதைகளாக்க வேண்டாம்.

இளம் பெண்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பற்றி புரிதலை வழங்குவதற்கு கல்வி அமைச்சுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம். கல்வி அமைச்சு மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## வகுப்பறை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹரிணி தெரிவித்தார்.

புதிய கல்வி மறுசீரமைப்பிற்காகச் செய்யவேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன.ஆசிரியர்பயிற்சிக்கல்லூரிகளின் பாடத்திட்டங்கள் 16 வருடங்களாக மாற்றப்படவில்லை. அவை அனைத்தும் மாற்றப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் தொடர்ச்சியான பயிற்சிகளைவழங்கவேண்டும். ஓகஸ்ட்மாதம் முதல் பயிற்றுநர்களுக்குப் பயிற்சியளித்து, ஆசிரியர்பயிற்சிவழங்குவதற்கானஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

புதிய கல்வி மறுசீரமைப்பு குறித்து தென் மாகாண கல்வி அதிகாரிகளுக்கு அறிவூட்டும் நோக்குடன் நேற்று காலி, தக்ஷினபாய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பிரதமர் இதனைத் தெரிவித்தார். புதிய கல்வி மறுசீரமைப்புகள் குறித்து மாகாண அதிகாரிகளுக்கு அறிவூட்டும் நான்காவது நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி மறுசீரமைப்புக்காக நீங்கள் பெற்றுத்தரும் ஆதரவுக்கு நான் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையில், எமது ஆளும்தரப்பு ஆட்சிக்கு வருவதற்கு முன்பிருந்தே புதிய கல்வி மறுசீரமைப்பை மேற்கொள்வது பற்றி கலந்துரையாடப்பட்டு, திட்டமிடப்பட்டது. ஆளும்தரப்பின் கொள்கைகளுக்கு ஏற்ப நிபுணர்களுடன் கலந்துரையாடி, பல்வேறு தரப்பினரின் கருத்துக்களைப் பெற்றே, இந்தக் கொள்கைகள் வகுக்கப்பட்டன.

புதியக் கல்வி மறுசீரமைப்பில் பாடத்திட்டத்தினைமட்டுமின்றி,ஆசிரியர்களின் தொழில்சார் திறனை மேம்படுத்துதல், புதிய மறுசீரமைப்புக்கு ஏற்ப கல்வி நிர்வாக அமைப்பை மறுசீரமைத்தல், அனைத்து குழந்தைகளுக்கும் சமமான, தரமான கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், ஆகியவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இது எமது தனிப்பட்ட தேவைக்காகச் செய்யும் ஒன்றல்ல, நாட்டின் தேவையை உணர்ந்து, நாம் நிறைவேற்ற வேண்டிய ஒரு பொறுப்பாகும் என்ற உணர்வுடன் மேற்கொள்ளப்படும் ஒரு பணியாகும்.நேர்மையான எண்ணத்துடன், சமூகத்தில் இது குறித்த ஒரு புரிந்துணர்வை விவாதத்தை ஏற்படுத்தும் ஒரு தரப்பினர் அது போலவே, சரியான புரிதலை பெறாது விமர்சிக்கும் தரப்பினரும் இருக்கின்றனர். இன்னும்சிலர்அரசியல்இலாபங்களுக்காகவும் விமர்சிக்கின்றனர். இந்த மறுசீரமைப்பை மேற்கொள்வது ஒரு சவாலாகும். அது எளிதானதல்ல என்பதை நாம் அறிவோம். இருப்பினும்இதனைசெய்யாதிருக்கஇயலாது. இவை அனைத்தையும் நிவர்த்திச் செய்யவே மக்கள் எமக்கு வாக்களித்தார்கள்

புதிய கல்வி மறுசீரமைப்பிற்காக செய்ய வேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் பாடத்திட்டங்கள் 16 வருடங்களாக மாற்றப்படவில்லை. அவை அனைத்தும் மாற்றப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கும்,கல்வியாளர்களுக்கும் தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்க வேண்டும். ஆகஸ்ட் மாதம் முதல் பயிற்றுநர்களுக்குப்பயிற்சி அளித்து, ஆசிரியர் பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன, எனவும் பிரதமர் தெரிவித்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த உயர்கல்வி பிரதி அமைச்சர் , நளின் ஹேவகே,'புதிய கல்வி மறுசீரமைப்புடன் தொழில்சார் கல்வி நிறுவனங்களை முன்னோக்கிக்கொண்டுசெல்லத்தேவையான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுத்து வருகின்றோம். இதன்மூலம்,தேர்ச்சியடையாத மாணவர்கள் தொழில்சார் கல்விக்குச்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# கட்டுநாயக்கா விமான நிலையம் அருகே பட்டம் பறக்கவிடத் தடை

கட்டுநாயக்க விமான நிலைய வலயத்தை அண்மித்த பகுதியில் பட்டம் பறக்கவிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். 300 அடிக்கு உயரமான அளவில் பட்டம் பறக்கவிடப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்டுநாயக்க விமான நிலைய முகாமைத்துவ பிரிவின் தலைவர் அருண ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்மித்த வலயத்தில் பட்டம் பறக்கவிடுவது விமானங்களினதும், பயணிகளினதும் உயிருக்கு அச்சுறுத்தலாக காணப்படுகிறது.

விமான நிலையத்தை அண்மித்த வலயத்தில் பட்டம் பறக்கவிடுவதை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.இந்த வலயத்துக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதேசவாதிகளுக்கு இதற்கான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வலயத்துக்குள் 300 அடி உயரத்துக்கு மேலாக பட்டம் பறக்கவிட்டால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.ஆகவே குறிப்பிடப்படும் விடயத்தின் பாரதூரத்தை கருத்திற் கொண்டு பொதுமக்கள் செயற்பட வேண்டும் என்றார்.

# வலுச்சக்தி அலுவல்களுக்கான நாடாளுமன்ற உப குழு அமைப்பு

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தலைமையில் வலுச்சக்தி அலுவல்களுக்கான உபகுழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டது.

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற வளாகத்தில் கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபை (திருத்தச்) சட்டமூலம் குறித்த துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்ட பின்னர் இந்த உபகுழு நியமிக்கப்பட்டது.

வலுச் சக்தித் துறை தொடர்பில் அனுபவம் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேராவின் தலைமைத்துவத்தின் கீழான இந்த உபகுழுவின் ஊடாக இந்நாட்டின் மின்சாரம் மற்றும் வலுசக்தித்துறைகளில் எரிசக்தி துறையில் எதிர்காலத்தில் நேர்மறையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான பிரச்சினைகள் குறித்து விவாதித்து தேவையான பரிந்துரைகளை வழங்க எதிர்பார்த்திருப்பதாகத் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

# பெண்ணுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனை நேற்று நிறுத்தம்

## மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றத்தினால் பெண் ஒருவருக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனையை வலுவற்றதாக்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. 80 வயதுடைய பெண்ணொருவருக்கு விதிக்கப்பட்டிருந்த தண்டனையே இவ்வாறு நேற்றுமுன்தினம் நிறுத்தப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு இடம்பெற்றதாகக் கூறப்படும் கொலைச்சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரால் அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றத்தில் குறித்த பிரதிவாதிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இதற்கமைய மிக நீண்ட வழக்கு விசாரணையின் பின்னர் 2023ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம் பிரதிவாதிக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. எனினும் இந்தத் தீர்ப்புக்கு எதிராக பிரதிவாதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்திருந்ததுடன் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் நேற்றுமுன்தினம் நீதிமன்றம் இந்த தீர்ப்பளித்தது.

பிரதிவாதிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் ஒன்றுக்கு ஒன்று முரணாகவும் தெளிவில்லாமலும் இருப்பதாகத் தெரிவித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், இதற்கமைய அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம் வழங்கிய தூக்குத் தண்டனையை உறுதிப்படுத்த முடியாது உள்ளதாகக் குறிப்பிட்டு அந்தத் தீர்ப்பை வலுவற்றதாக்கி உத்தரவு பிறப்பித்தது.



காலைக்கதிர் Kalaikkathir

# மோ. சைக்கிள் திருட்டு குறித்து சந்தேகநபர்கள் 3 பேர் கைது

குருநாகல் கிரியுல்ல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் மோட்டார்சைக்கிள்திருட்டுசம்பவங்களுடன் தொடர்புடையதாகக்கூறப்படும் 20 வயதுடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போதுதிருடப்பட்டதாகக்கூறப்படும் நான்கு மோட்டார்சைக்கிள்களும் ஐஸ் போதைப்பொருளும்சந்தேகநபர்களிமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குகிடைக்கப்பெற்றஇரகசிய தகவலுக்கு அமைய கிரியுல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லப்பல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே சந்தேகநபர்கள்கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போதுசந்தேகநபர்களிடமிருந்து305 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். 20 வயதுடைய கொட்டதெனிய பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகபொலிஸ்ஊடகப்பிரிவு தெரிவித்தது.

மேலும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது சந்தேக நபர்கள் மூவரும்நீர்கொழும்புமற்றும்குளியாப்பிட்டி உள்ளிட்ட பொலிஸ் பிரிவுகளில் தொடர்ச்சியாக மோட்டார் சைக்கிள்களை திருடி வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

திருடப்பட்ட நான்கு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் குற்றச்செயல் ஒன்றுக்கு பயன்படுத்தப்பட்டதாகக்கூறப்படும் மற்றுமொரு மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிரியுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

# புத்தளம் முதல் பொத்துவில் வரை கடலுக்குச் செல்வதை தவிர்க்குக

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பிற்கு மறு அறிவித்தல் விடுக்கும் வரையில் செல்லவேண்டாம் என்று கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்கள் திணைக்களம் மீனவர்களுக்கு வலியுறுத்தியுள்ளது.

இந்த கடற்பரப்பில் எதிர்வரும் நாட்களில் பலத்த காற்று வீசக்கூடும் வானிலை ஆராய்ச்சி திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த குறிப்பிடுகையில்,

2025.07.18 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட காலநிலை தொடர்பான அறிக்கையில் கடற்பரப்பில் ஒருநாள் மீன்பிடி படகுகள் மற்றும் உகந்த கடற்படை பதில் திட்ட இயந்திர கப்பல் ஆகியன மறுஅறிவித்தல் விடுக்கும் வரையில் புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் இதர நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

காலநிலை தொடர்பில் விடுக்கும் அறிவுறுத்தல்களை கவனத்திற் கொள்ளாமல் நேற்று முன்தினம் கடலுக்கு சென்ற மீனவர்கள் தற்போது நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.சிலாபம் பகுதியில் படகொன்று விபத்துக்குள்ளாகியுள்ள நிலையில்,அதில் இருந்த மீனவர்கள் பாதுகாப்பான முறையில் கரைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐந்து படகுகள் கடும் காற்று மற்றும் சீரற்ற காலநிலையால் துறைமுக நகர கடற்கரையை வந்தடைந்துள்ளன.

காலநிலை தொடர்பில் விடுக்கும் அறிவுறுத்தல்களை மீனவர்கள் அலட்சியப்படுத்த கூடாது. அறிவுறுத்தல்களை மீறி கடலுக்கு சென்று அனர்த்தத்துக்குள்ளாவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

# சுற்றுலாவிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் திட்டம் ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்பம்

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் திட்டம் 2025 ஓகஸ்ட் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் திட்டம் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளது. தேவையான சட்ட நடைமுறைகள் முடிவடைந்த பின்னர் இது அமுலுக்கு வரவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், சுற்றுலாப் பயணிகளுக்கு 14 நாட்கள் அல்லது 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மேலும், நாட்டில் நீண்ட காலம் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு 8 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படும் என்றார்.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பெண் பிள்ளைகளின் கல்வியை உலுக்கும் ஆபத்து

பாடசாலை மாணவிகள் கர்ப்பமடையும் வீதம் இலங்கையில் அண்மைக்காலங்களில்குறிப்பிடத்தக்கஅளவில்உயர்ந்துள்ளதாக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் நேற்று வெளிப்படையாகக் கூறியுள்ளார். இந்தத் தகவல் மிகுந்த சோகத்தையும், துயரத்தையும் ஏற்படுத்துவதுடன், எதிர்காலத் தலைமுறையின் கல்வி, உடல், மன நலத்தையும் ஆழமாக பாதிக்கக்கூடிய தன்மை கொண்டதாக உள்ளது.

இது வெறும் எண்ணிக்கைகளின் உயர்வாகவே பார்க்க முடியாதது. மாணவிகள் கர்ப்பமடைவது என்பது அவர்களின் கல்விப் பாதையை முற்றிலும் தடுக்கும் சமூகவியல் துயரச் சிக்கலாக உருவெடுக்கிறது. நாடாளுமன்றத்தில்முன்வைக்கப்பட்ட இந்த விவரங்கள், சமூகத்தின் பல அடுக்குகளிலும் இருக்கும் பின் தங்கிய விழிப்புணர்வின் பின்விளைவுகளை சுட்டிக்காட்டுகின்றன. இது ஒரு குடும்பத்திற்கோ அல்லது ஒரு மாணவிக்கோ உரித்தான பிரச்சினையாக இல்லாமல், நாட்டின் கல்வி மற்றும் சமூக நலத்தையே கேள்விக்குள்ளாக்கும் விடயமாக உள்ளது.

பலர் இந்தச் சம்பவங்களை தனிநபர் தவறுகளாகவே குற்றம் சுமத்திப் பார்க்கின்றனர். ஆனால், இவை ஒருவரின் தவறுக்கே அல்ல, முற்றிலும் ஒரு சமூகத்தின் தோல்விக்கான சான்றுகளாகவே பார்க்கப்படவேண்டும். குறைந்த வயதில் உள்ள சிறுமிகள் எப்படிக் கர்ப்பமடைகின்றனர்? அவர்கள் இதற்கெல்லாம் சிக்கிக்கொள்ளும் சூழ்நிலைகள் எவை? ஆகிய கேள்விகளுக்கான விடைகளை நாம் தேட வேண்டிய கடமையில் இருக்கின்றோம்.

இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம் குடும்பக் கட்டுப்பாடுகள் குறைவாகிவிட்டதா? சமூக ஊடகங்களில் காணப்படும் மோசமான உள்ளடக்கங்கள் எதிர்வினையாக உள்ளதா? பாலியல் கல்வி முறையாக வழங்கப்படாததா காரணம்? பெற்றோரின் கவனக்குறைவா? அல்லது வறுமை, பொருளாதார உந்துதல் காரணமா?

இந்தவகைச்சம்பவங்களைத்தடுப்பதற்குகல்விஅமைச்சும், சமூகநலன்களைமேம்படுத்தும்அமைச்சுகளும்ஒருங்கிணைந்த வகையில் செயலாற்றவேண்டும். பாடசாலைகளில் கட்டாய பாலியல் கல்வி உள்ளடக்கப்படவேண்டும். இந்தக் கல்வி பயில்வோர் பாலியல் உறவு, அந்தத் தீர்வுகளின் விளைவுகள், தனிமனிதப் பாதுகாப்பு, சட்டங்கள் உள்ளிட்ட அனைத்தும் தெளிவாக அறிய வேண்டும். இது கற்பதற்கே உரிய பாடமாகவே ஏற்கப்பட வேண்டும், தடைபட்ட விஷயமாகவல்லாமல்.

அத்துடன், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் மாணவிகள் மீது கண்காணிப்பு செலுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. சமூகவலைதளங்களிலும், தொலைபேசிக் பயன்பாடுகளிலும் பள்ளி மாணவிகள் எவ்வாறு ஈடுபடுகிறார்கள் என்பதைப் பரிந்துரைக்கும் வழிகாட்டல்கள் பெற்றோர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். பள்ளிகளில் மாணவிகளுக்கான தனிப்பட்ட ஆலோசனை மையங்கள் இயங்க வேண்டும். மனநல ஆலோசகரின் பங்கு இங்கே மிகவும் முக்கியம்.

ஆளும்தரப்பு, அரசியல்வாதிகள், ஊடகங்கள், சமயஸ் நிறுவனங்கள், சமூக அமைப்புகள் என அனைவரும் இணைந்து செயல்பட்டாலே இதுபோன்ற சம்பவங்களைத் தவிர்க்க முடியும். சமூக விழிப்புணர்வே தீர்வு என்பதையே நாம் ஏற்க வேண்டிய நேரம் இது.

தற்போதைய இளம் தலைமுறையை நாம் காப்பாற்ற இயலவில்லை என்றால், நம்மைத் தொடர்ந்து வரும் தலைமுறைகளின் வாழ்வாதாரமும் கேள்விக்குரியதாகவே மாறும். ஆகவே, மாணவிகள் கர்ப்பமடையும் சம்பவங்களை ஒரு எளிய செய்தியாக எடுத்துக் கொள்ளாமல், மிகப் பெரும் சமூக நெருக்கடியின் ஆரம்பக் கட்டமாகவே நாம் உணர வேண்டிய கட்டாயம் இன்று இருக்கிறது.

# சுவாமி விபுலானந்தர் துறவ நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நேற்று மருதடி ஆலயத்தில் தொடக்கம்



முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவறம் பூண்ட நூற்றாண்டு விழா நிகழ்வுகள் புத்தசாசன மற்றும் சமய விவகாரங்களுக்கான அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ். மாவட்டச் செயலகம், யாழ்ப்பாண பிரதேச செயலகம், அகில இலங்கை இந்துமா மன்றம் மற்றும் யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து மானிப்பாயில் விபுலானந்த அடிகளாரின் 78 ஆவது மகா சமாதி தினமான நேற்றுத் தொடங்கின. இன்றும் இடம்பெறவுள்ளன.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்று அங்கிருந்து கலை, கலாசார பேரணியாக நிகழ்வு நடைபெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீ பவானந்தராஜா, றஜீவன், மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ். மாவட்டச் செயலர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர், யாழ். மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதிய ரத்து சட்டம் விரைவில்

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதிகளுக்குரிய ஓய்வூதியத்தை இரத்து செய்வதற்குரிய சட்டமூலம் வெகுவிரைவில் நிறைவேற்றப்படும் என கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

நெடுந்தீவுக்கு வெள்ளிக்கிழமை சென்றிருந்த அமைச்சர் மக்கள் அமைப்புகள் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடி, அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்துகொண்டார்.

அதன் பின்னர் நெடுந்தீவு பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் விளக்கமளித்தார். அதனை தொடர்ந்து அமைச்சர் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் ஊழல்வாதிகள் மற்றும் மோசடியாளர்கள் தப்பவே முடியாது. ஊழல் அரசியல் கலாசாரத்துக்கு முடிவு கட்டவே நாம் ஆட்சிக்கு வந்தோம். அதற்கே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அதற்கமைய ஊழல்களில் ஈடுபட்ட மோசடியாளர்கள் தற்போது சட்டத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளனர்.

நாம் சட்ட விவகாரத்தில் தலையிடவில்லை. சட்டம் தனக்குரிய வகையில் தனது கடமையை நிறைவேற்றும்.

அதேபோல மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் நிச்சயம் கட்டம், கட்டமாக நிறைவேற்றுவோம். இது தொடர்பில் அச்சம்கொள்ள வேண்டியதில்லை. வழங்கப்பட்ட உறுதிமொழிகளை ஒரே இரவில் நிறைவேற்றிவிட வேண்டும் என சிலர் நினைக்கின்றனர். அது தவறு.

அதேவேளை, வறுமையின் கோரப்பிடிக்குள் இருந்து மக்களை மீட்பதற்காக சமூக சக்தி வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அரசியல், பொருளாதார மற்றும் சமூக மேம்பாடே எமது இலக்கு. அந்த சமூகமேம்பாட்டு திட்டத்தை வறுமை நிச்சயம் ஒழிக்கப்படும். அதற்குரிய வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன என மேலும் தெரிவித்தார்.









காலைக்கதிர் Kalaikkathir

## வகுப்பறை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதற்குப் பதிலாக, அவர்களின் திறமை மற்றும்ஆற்றலின்அடிப்படையில்பாடசாலைக் கல்வியின் ஊடாகவே தொழில்சார் கல்வியை கௌரவமான முறையில் கற்பதற்கான வாய்ப்பு உருவாக்கப்படும்' என தெரிவித்தார்.

## கொழும்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வேளை அவ்விடத்திற்கு தவிசாளர் வருகை தந்த போதிலும், நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்த தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் தவிசாளரை புறக்கணித்திருந்தனர்.

அந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராசா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். ஆனாலும் அவர்களும் பிரதேச சபைத் தவிசாளருக்கு உரிய மரியாதை தரவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

அதேபோன்று கடந்த வாரம் நயினாதீவு பிரதேசவைத்தியசாலையின் வெளிநோயளர் பிரிவுக்கான புதிய கட்டடத் திறப்பு விழாவில் வேலணை பிரதேச சபை தவிசாளர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

அந்த நிகழ்வில் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன்நாடாளுமன்றஉறுப்பினர்களான சிறீபவானந்தராசா, இளங்குமரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிலையில், யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் துறவற நூற்றாண்டு விழா நேற்று நடந்தது. இந்த நிகழ்வில் மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.அதனால்நிகழ்வைப் புறக்கணித்துவிட்டு மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளரும், உறுப்பினர்களும் நிகழ்வில் இருந்து வெளியேறினர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமை அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார். தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

அதேவேளை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும், தவிசாளர்களுக்கு ஆசன ஒதுக்கீடுகள் உரிய முறையில் செய்யப்பட்டிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த தொடர்பில்கூட்டத்தில்விசனம்தெரிவித்தபோது, அடுத்த கூட்டத்தில் உரிய இட ஒதுக்கீடு செய்து தருவதாகஒருங்கிணைப்புக்குழுவின்தலைவர் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்திருந்தார்.

பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், நிகழ்வுகளில் அப்பிரதேச தவிசாளர்களை புறக்கணித்து கொழும்பு ஆளும்தரப்பு நேரடியாக தலையீடு செய்வது, என்பிபி ஆளும்தரப்பு சொல்லும் கிராமங்களுக்கும் அதிகாரம் என்கிற கருப்பொருளுக்கே முற்றிலும் முரணானது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## கல்வி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்த வேண்டுமாயின் அது சட்டத்தின் ஊடாக இயற்றப்பட வேண்டும்.உத்தேச கல்வி மறுசீரமைப்புக்கு ஆளும்தரப்பு ஏதேனும் சட்டமூலங்களை தயாரித்துள்ளதா, ஏதுமில்லை. அரசாங்கத்தின் புதிய கல்வி மறுசீரமைப்பு சில்லறைத்தனமானது என்றே குறிப்பிட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் உத்தேச புதிய கல்வி மறுசீரமைப்புக்கான பணிகளுக்கு முன்னாள் பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் தலைமையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.இந்த குழு சமர்ப்பித்த அறிக்கையைசமர்ப்பித்தது.இந்தஅறிக்கையை அடிப்படையாகக் கொண்டு உயர்கல்வி ஆணைக்குழு சட்டமூலத்தை சமர்ப்பித்து அப்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் கையளித்தேன்.

உயர் கல்வி ஆணைக்குழு சட்டமூலம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. புதிய சட்டம் ஒன்றை இயற்றிதான் புதிய கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்த வேண்டும் என்பதை ஆளும்தரப்பு விளங்கிக் கொள்ள வேண்டும்.அரசாங்கத்தால் புதிய சட்டத்தை இயற்ற முடியாவிடின் நாங்கள் சமர்ப்பித்த உயர்கல்வி ஆணைக்குழு சட்டமூலம் ஜனாதிபதி செயலகத்தில் உள்ளது,அதனை சட்டமாக்கலாம் என்றார்.

## துப்பாக்கிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மது வரித் திணைக்களத்தின் அதிகாரி ஒருவருக்கும் வர்த்தகர் ஒருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் இடம்பெற்றுள்ளது. இதன் போது ஏற்பட்ட முரண்பாடு காரணமாக குறித்த வர்த்தகர் தம்வசம் இருந்த ரிவோல்வர் ரக துப்பாக்கியால் மதுவரி திணைக்களத்தின் அதிகாரி மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ள முயற்சித்துள்ளார்.

இதன்போது மதுவரி திணைக்கள அதிகாரி அதனை தடுக்க முற்பட்டுள்ளார். எனினும் குறித்த சந்தர்ப்பத்தில் துப்பாக்கி இயங்கியமையால் அது களியாட்ட விடுதியில் சுவர்களை நோக்கி சுடப்பட்டுள்ளது.

இச்சம்பவம்தொடர்பில்தலங்கமபொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் இடம்பெற்றது. இதற்கமைய குறித்த சம்பவத்துடன் தொடர்புயைடதாக கூறப்படும் மதுவரி திணைக்களத்தின் அதிகாரி மற்றும் குறித்த வர்த்தகர் நேற்று முற்பகல் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர். மேலும் வர்த்தகரிடமிருந்த துப்பாக்கியையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நேற்று கடுவல நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதற்கமைய அவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். கைது செய்யப்பட்ட மதுவரி திணைக்களத்தின் அதிகாரி விக்கிரமசிங்கபுர மதுவரி திணைக்களத்தின் கடமையாற்றும் உத்தியோகத்த ராவார்.

சம்பவம் தொடர்பில் தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு மாற்று வழியூடாக சென்று வழிபட அனுமதி

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு தினமும் காலை 06 மணி முதல் மாலை 06 மணி வரையில் தற்காலிக பாதை ஊடாக சென்று வழிபாடுகளை மேற்கொள்ள இராணுவத்தினர் ஜூலை 17 முதல் அனுமதி வழங்கியுள்ளனர்.

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு 35 வருடங்களின் பின்னர், கட்டுப்பாடுகள் இன்றி வழிபட ஜூன் 27 அனுமதித்த இராணுவத்தினர் மறுநாளே பாதுகாப்புக் காரணங்கள் எனக் கூறி ஆலயத்திற்கு செல்லும் அனுமதியை மறுத்திருந்தனர். பலரதும் வேண்டுகோளை அடுத்து இப்போது மீண்டும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது. எனினும் பிரதான வீதியூடாக அன்றி மாற்றுப் பாதையூடாகச் சென்று வருவதற்கு அனுமதி விழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு போர் காரணமாக 1990ஆம் ஆண்டு ஜூன் 15 பலாலியில் இருந்து மக்கள் வெளியேறி இருந்தனர். அதனை தொடர்ந்து அப்பகுதி இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது.

கடந்த 35 வருட காலமாக உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஆலயத்திற்கு 6 மாதங்களிற்கு முன்னரே சுதந்திரமாக சென்று வழிபட அனுமதி வழங்கப்படும் என இராணுவத்தினர் அறிவித்திருந்த போதிலும், கடுமையான கட்டுப்பாடுகளுடன், விசேட தினங்களில் மாத்திரம் ஆலயத்திற்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஆலயத்திற்கு மாத்திரம் செல்வதற்கு என உயர் பாதுகாப்பு வலயத்தினுள், மக்கள் காணிகள் ஊடாக பிரத்தியோக பாதை அமைக்கப்பட்டு, குறித்த பாதை ஊடாக மக்கள் ஆலயத்திற்கு மாத்திரம் சென்று வழிபாட்டு திரும்ப இராணுவத்தினர் இப்போது அனுமதி வழங்கியுள்ளனர்.

காலை 06 மணியிலிருந்து மாலை 06 மணி வரை மாத்திரமே வழிபாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஜூலை 31 இராஜேஸ்வரி ஆலயத்தின் திருவிழா இடம்பெறவுள்ள நிலையில் 24 மணி நேரமும் ஆலயத்திற்குச் சென்று வருவதற்கான சூழல் உருவாக்கப்பட்டாலே இரவு நேர பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் எனப் பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் ஆலயத்தின் நான்கு புறங்களிலும் இராணுவ காவலரண்கள் காணப்படும் சூழலில் அது அச்சுறுத்தலாக இருப்பதாகவும் பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆலயம் விடுவிக்கப்பட்டுள்ளது என வாய்மூலம் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் எழுத்து மூலமான ஆவணம் அரச அதிகாரிகளால் வழங்கப்பட்டால் மாத்திரம் தமக்கு உண்மையான விடுவிப்பாக அமையும் என ஆலய நிர்வாகத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

நேறையதினம் 18 ஆலய நிர்வாகத்தினர் கோயில்வளாகத்தினைத் துப்புரவு செய்யும் பணிகளை முன்னெடுத்தனர்.




# தெஹிவளை சூட்டுச் சம்பவத்தின் மோ. சைக்கிள் பொலிஸால் மீட்பு

கொழும்பு தெஹிவளை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் மோட்டார் சைக்கிள் பிலியந்தல பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸ் விசேட அதிப்படையினரால் மீட்கப்பட்டது.

தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் முற்பகல் மேற்கொள்ளபட்டிருந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்திருந்தார்.

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவர், கார் ஒன்றில் இருந்த 46 வயதுடைய வெல்லவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை இலக்கு வைத்துதுப்பாக்கிச்சூடு மேற்கொண்டிருந்தனர்.

சம்பவத்தின் போது பாதிக்கப்பட்ட நபர் வட்டிக்கு பணம் வழங்கும் ஒருவரவார். இந்த விடயமாக அவர் தெஹிவளை பிரதேசத்துக்கு வருகை தந்திருந்த போது இந்ததுப் பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் குறித்த நபருக்கு எதிராக எந்தவித குற்றச்சாட்டுக்களும் இதுவரை பதிவாகியிருக்கவில்லை எனவும் அவருக்கு இதற்கு முன்னர் உயிர் அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் குறித்த நபர் வெலே சுதா என அழைக்கப்படும் போதைப்பொருள் வர்த்தகரின் உறவுமுறை பெண்ணொருவரை திருமணம் செய்திருந்த போதிலும் குறித்த இருவரும் இடைநடுவில் விவகாரத்து பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

துப்பாக்கிப்பிரயோகத்துக்குள்ளான நபர் திட்டமிட்டக் குற்றச்செயல்களுடன் தொடர்புயைடதாகக்கூறப்படும்தரப்பினரான ‘படோவிட்ட அசங்கவின்‘ நெருங்கிய உறவினர் என்பதுடன் இந்தத்துப்பாக்கிப்பிரயோகம் “கொஸ் மல்லி“ யின் தரப்பினரால் மேற்கொள்ளப்பட் டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் இத்துப்பாக்கிப் பிரயோகத்துக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் மோட்டார்சைக்கில் பிலியந்தல பகுதியில் உள்ள குறுக்கு வீதியில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சிவப்பு நிற தலைக்கவசத்துடன் குறித்த மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் விசேட அதிரப்படையினர் வழங்கிய தகவலுக்கு அமைய குறித்த மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு காரொன்றின் இலக்கத்தகடு என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் தெஹிவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழ் விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நடிகர் ஜெயம் ரவியுடன் நேற்று அமைச்சர் விஜித ஹேரத் சந்திப்பு



அயலுறவு, சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத்திற்கும், பிரபல இந்திய நடிகரும் தயாரிப்பாளருமானரவி மோகன் மற்றும் பாடகி கெனிஷா பிரான்சிஸிற்கும் இடையில் நேற்று காலை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அமைச்சர் விஜித ஹேரத் இந்த சந்திப்பு தனது எக்ஸ் தளத்தில் - இலங்கையில் திரைப்பட சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முக்கியமான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது இலங்கை சுற்றுலா தலங்களையும் இலங்கையின் வளமான கலாசாரத்தையும் ஊக்குவிக்கும் எதிர்கால திரைப்பட தயாரிப்பு மற்றும் இசை நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்தும் இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள கண்கவர் இடங்களுக்கு மேலும் சுவாரஸ்யமான கதைகள் மற்றும் வெளிநாட்டு தயாரிப்புகளைக் கொண்டு வர எதிர்பார்க்கின்றேன் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான ‘மருதம்’ நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.07.2025இல் வெளியிடப்பெற்றது